00012

(முழுப்பதிப்புரிமை உடையது)

## இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

இலங்கை நிருவாக சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை பொறியியலாளர் சேவை மற்றும் இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாம் வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சை 2013(1)

## நிருவாகம் (04)

3 மணித்தியாலங்கள்

**5 வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**
**அனைத்து வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.**

1. ஒரே ஆட்சேர்புத்திட்டம் மற்றும் பதவி உயர்வு திட்டத்திற்கு அல்லது சேவைக் குறிப்பிற்கு உட்படும் உத்தியோகத்தர் மத்தியில் ஏற்படும் முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கு அவர்களின் சேவை மூப்பினைத் தீர்மானிப்பதற்கு போதுமான அளவு பிரமாணங்கள் காணப்படுகின்றனவா? உரிய ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடுக.

2. " தான் விண்ணப்பித்த பதவியொன்றிக்கு தன்னை நியமிக்காமை தொடர்பாக நியமன அதிகாரியான அரச சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்வதற்கு சாதாரண பிரஜை ஒருவருக்கு உரிமை உள்ளதா?" என்பதனை விளக்கி அரச சேவை ஆணைக்குழுவிற்கு முறையீடு செய்வது தொடர்பான ஏற்பாடுகளை விபரிக்குக.

3. அரச உத்தியோகத்தர்கள் தொடர்பான ஒழுக்கக் கோவையினுள் "இரு பக்கத்திற்கும் காதுகொடுத்தல்" என்ற இயற்கை நியதியை நிச்சயப்படுத்துவதற்கான போதுமான ஏற்பாடுகள் காணப்படுகின்றன. விமர்சன ரீதியாக ஆராய்க.

4. அரச உத்தியோகத்தர்களுக்கு எதிராக நீதிமன்றத்தினால் அல்லது நியதிச்சபை அதிகாரிகளினால் விதிக்கப்படுகின்ற கட்டளைகள் தொடர்பில் ஒழுக்காற்று அதிகாரி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை விளக்குக.

5. "முறையான ஒழுக்காற்று விசாரணை ஒன்றின் போது குற்றவாளிக்கு எதிராக எழுப்பப்பட்டுள்ள குற்றங்களினை நிரூபிக்கும் காத்திரமான பணி, வழக்குத் தொடுக்கும் உத்தியோகத்தர்களுக்கு உரியதாகும்." இந்நிலையினை உறுதிப்படுத்துவதற்காக வழக்குத் தொடுக்கும் உத்தியோகத்தர் தொடர்பாக தாபனக்கோவையில் காணப்படும் ஏற்பாடுகளை மெருகூட்டுவதற்கு உமது யோசனைகளை முன்வைக்குக.

6. உத்தியோகபூர்வ ஆவணங்களைப் பாதுகாத்தல், பொறுப்பேற்றல் மற்றும் அழித்தல் என்பன தொடர்பான ஏற்பாடுகளை விளக்குக.

7. உத்தியோகபூர்வ முறையில் அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு ஒன்றில் பதில் வழங்குவது தொடர்பாக அவ் அரச உத்தியோகத்தர் தொடர்பில் நடைமுறையாகும் தாபனக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் யாவை?

8. சிறுகுறிப்பெழுதுக

    8.1 பதிலீடு அடிப்படையில் செய்யப்படும் நியமனம்

    8.2 அரச உத்தியோகத்தர்

    8.3 குற்றப் பத்திரிக்கையினைத் திருத்துதல்

    8.4 கள உத்தியோகத்தர்களின் முன்கூட்டிய நிகழ்ச்சி (Advance Program)

************